தலைமைப்பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., நீஆது,
திருச்சி மண்டலம் திருச்சி 20.

Email Id : cetrydb@gmail.com., Office Ph No: 0431-2331411., Fax No: 0431-2331148

முன்னிலை: பொறி.ச.இராமமூர்த்தி,பி.இ.,எம்.பி.ஏ.,
தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து., பொபது.,

**செ.மு.க.எண். சி2 / 2969 / 2020 / நாள்: 12.11.2020.**

பொருள் :- பணியமைப்பு – பொதுப்பணித்துறை - த.நா.அ.ப.தொகுதி – திருமதி.எஸ்.முத்தழகி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டவர் அரசால் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டது இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :- அரசாணை (3ப) எண்-64 / பொதுப்பணி(பி1)துறை/ நாள்: 18.09.2020.

*******

கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு இம்மண்டல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.எஸ்.முத்தழகி, என்பவருக்கு அவர் தம் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 27.08.2018 முற்பகல் பணிவரன் முறை செய்யப்பட்டு பார்வை 1-இல் காணும் அரசாணையில் அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14 / 2016)-ன் பிரிவு 28-ன்படி கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் தனியர் பணியேற்ற நாளான **27.08.2018** மு.ப முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். அப்பதவியில் தமது மூன்றாண்டுகால தொடர்பணியில் இரண்டாண்டு காலப்பணியினை திருப்திகரமாக நிறைவு செய்தல் வேண்டும்.

தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர்

அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண்பருவம் துவக்கி ஆணை வழங்கப்படுகிறது.

தலைமைப்பொறியாளர், பொ.ப.து.,சார்பில்
நீ.ஆ.து., திருச்சி மண்டலம், திருச்சி-20.

பெறுநர்

திருமதி.எஸ்.முத்தழகி
இளநிலை உதவியாளர்
மண்டல அலுவலகம், நீஆது.,
திருச்சி.20.

**சுருக்கம்**

பொதுப்பணிகள்—பொதுப்பணித்துறை—தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம்— திருமதி எஸ்.முத்தழகி, த/பெ. காலஞ்சென்ற திரு ஏ.செல்வமணி – இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம்— தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016—ன் பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றினைத் தளர்வு செய்து பணிவரன்முறை செய்தல்— ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணித் (பி1) துறை**

அரசாணை (3ப) எண்.64

நாள் 18.09.2020
சார்வரி, புரட்டாசி 2.
திருவள்ளுவர் ஆண்டு—2051.

**படிக்கப்பட்டன:—**

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி கடிதம் எண். சி2/9078/2018, நாள் 10.06.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.

———

**ஆணை:—**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சி மண்டல ஆளுகைக்குட்பட்ட திருச்சி, நீர்வள ஆதாரத்துறை, நடுக்காவிரி வடிநில வட்டம் / திருச்சி, நீர்வள ஆதாரத்துறை, ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம்/ இலால்குடி, நீர்வள ஆதாரத்துறை, ஆற்றுப்பாதுகாப்பு உபகோட்ட அலுவலகத்தில் பாசன உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு ஏ.செல்வமணி 27.09.2006 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரரான அவரது மகள் திருமதி எஸ்.முத்தழகி என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவி அளிக்கப்பட்டு, அவர் 27.08.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வியை ஏப்ரல் 2004—இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 27.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு திருச்சி மண்டலம், நீர்வள ஆதாரத்துறை, தலைமைப் பொறியாளர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கருத்துரு நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திரு. ஏ.செல்வமணி, பாசன உதவியாளர் அரசுப் பணியிலிருக்கும் போது 27.09.2006 அன்று காலமாகியுள்ளார். திருமதி எஸ்.முத்தழகி அவர்களின் பிறந்த தேதி 24.04.1987 ஆகும். அரசு ஊழியர் திரு ஏ.செல்வமணி இறந்து மூன்று ஆண்டுகளுக்குள், 18.06.2007 அன்று அவரது மனைவி திருமதி. எஸ்.பொன்னம்மாள் கருணை அடிப்படையில் அவர்களது மகள் எஸ்.முத்தழகி அவர்களுக்கு பணி அளிக்க வேண்டி விண்ணப்பம் அளித்துள்ளார். திரு. ஏ.செல்வமணி இறந்த போது திருமதி எஸ்.முத்தழகி அவர்களின் வயது 19 ஆண்டுகள் மற்றும் 5 மாதங்கள் ஆகும். பணிவேண்டி விண்ணப்பம் அளித்த நாளில் அவரது வயது 20 ஆண்டுகள் ஆகும். இளநிலை உதவியாளராக 27.08.2018 அன்று பணியில் சேரும் போது அவரது வயது 31 ஆகும். திருமதி எஸ்.முத்தழகி, ஏப்ரல் 2004—இல் இடைநிலைக் கல்வி (S.S.L.C.) தேர்ச்சி பெற்றுள்ளார். அவர் அப்பதவிக்குண்டான கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றுள்ளார். மேலும், தனியருக்கு பணி நியமன நாளுக்கு முன்னரே திருமணமாகியுள்ளது. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 23.01.2020—ன்படி இறந்த அரசுப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016

பிரிவு 15–ல் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இந்நேர்வில் குறிப்பிடப்படும் திருமணமான பெண் வாரிசுதாரருக்கு வழங்கப்பட்ட பணி நியமனத்தை வரன்முறை செய்ய மேற்காணும் சட்டப்பிரிவினைத் தளர்வு செய்யும் நிலை எழும். எனவே, திருமணமாகியுள்ள நிலையில் தனியருக்கு பணி நியமனம் வழங்கியுள்ள செயல் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15–க்கு முரணானதாகும். எனவே, மேற்காண் சட்டப் பிரிவிற்குத் தளர்வு அளிக்க வேண்டியுள்ளது.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், பொதுப்பணித்துறையில் கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனமானது திருமதி எஸ்.முத்தழகி அவர்களுக்கு, திருமணமானப் பின்னர் வழங்கப்பட்டுள்ளதால், தனியரின் பணியினை அவர் அப்பதவியில் சேர்ந்த நாளான 27.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்திடவும், தனியருக்குண்டான பணப்பலன்களை முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்பட்ட நாள்முதல் வழங்கவும் ஏதுவாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–இன் பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றினை அச்சட்டத்தின் பிரிவு 58–இன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தித் தளர்வு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித்துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி எஸ்.முத்தழகி என்பவரின் பணியினை அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 27.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண். 12259/ட்டி.1/2020–1, நாள்:11.09.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,அ.சா.எண்.22068/ஜி1/2020–1, நாள்:15.09.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
திருமதி எஸ்.முத்தழகி, இளநிலை உதவியாளர்.
(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை –18.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை.–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை/
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்